

■ கடலூர் கெடிலம் ஆற்று புதிய பாலத்தில் போக்குவரத்து தடை செய்ததால், அண்ணா பாலத்தில் வாகனங்கள் நீண்டதூரம் அணிவகுத்து நின்றதால் போக்குவரத்து ஸ்தம்பித்தது.

புதிய பாலத்தில் வாகனங்கள் செல்ல தடை கடலூரில் போக்குவரத்து நெரிசல்

கடலூர், அக். 2–

கடலூர் புதிய பாலத்தில் வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்பட்டதால் பழைய பாலத்தில் 1 மணி நேரம் போக்குவரத்து பாதித்தது.

கடலூர் கெடிலம் ஆற்றின் குறுக்கே உள்ள அண்ணா பாலம் அருகில் ரூ.22.25 கோடி மதிப்பில் புதிய பாலம் கட்டப்பட்டது. இந்த பாலத்தில் கடந்த 18ம் தேதி முதல், சோதனை ஓட்டம் நடந்தது.

அதாவது, கடலூர் மார்க்கத்தில் இருந்தும், கம்மியம்பேட்டை இணைப்பு சாலை வழியாக வரும் வாகனங்கள் புதிய பாலம் வழியாகவும், புதுச்சேரி மற்றும் பண்ருட்டி மார்க்கத்தில் இருந்து வந்த வாகனங்கள் பழைய பாலத்தில் இயக்கப்பட்டன.

இந்நிலையில், புதிய பாலத்தின் இணைப்பு சாலை சீரமைக்கும் பணி நேற்று காலை துவங்கியது. இதற்கான புதிய பாலத்தில் போக்குவரத்து தடை செய்யப்பட்டு, பழைய பாலத்தின் வழியாகவே திருப்பி விடப்பட்டது. இதற்கிடையே லாரன்ஸ்ரோடு சிக்னல் அருகில் பெரிய அளவில் ரவுண்டானா அமைக்கப் பட்டதாலும், புதிய பாலத்தில் போக்குவரத்துக்கு தடை விதித்ததாலும் காலை முதல், இம்பீரியல் மற்றும் லாரன்ஸ் சாலைகளில் போக்குவரத்து பாதித்து வந்தது.

இரவு 7:00 மணிக்கு பழைய பாலம் மற்றும் இம்பீரியல் சாலையில் நீண்டதூரம் வாகனங்கள் அணிவகுத்து நின்றதால் வாகன ஓட்டிகள் அவதியடைந்தனர். 8:00 மணி வரை போக்குவரத்து நெரிசல் நீடித்தது. இதையடுத்து போக்குவரத்து போலீசார், புதிய பாலத்தின் வழியாக வாகனங்களை திருப்பி விட்ட பிறகு போக்குவரத்து சீரானது.

டாக்டர். T.L. வாசுதேவன்
டெலிபல் ஆடியோலஜி சென்டர், பாண்டிச்சேரி
signia Life sounds brilliant.
சிறந்த சீமென்ஸ் Signia காதுகேட்கும் மெஷின்கள்
DECIBEL HEARING AIDS
நெய்வேலி கிளை
நெய்வேலி பிளாஸா
கடை எண்.2, முதல் மாடி, NLC ஆர்ச் கேட் எதிரில்
காது கருவிகள் சிறப்பு முகாம்
மிக அதிக தள்ளுபடிகள், ஆடியோக்ராம் சோதனைகள், பல விலைகளில், காதின் பின்புறம், உள்புறம் முழுவதும் காதின் உள்ளே மெஷின்கள் பொருத்திக்காட்டப்படும், ரெடி ஸ்டாக் விற்பனை.
தேதி : 03.10.2026 சனிக்கிழமை
நேரம் : காலை 10.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை
எங்கள் சேவை, உங்கள் வாயிலில்
முன்பதிவு செய்திட: 89038 11133, 94884 11133

மூதாட்டியிடம் செயின் பறிப்பு

சிதம்பரம், அக். 2–

சிதம்பரம் அம்மா பேட்டை வி.கே.எம். நகரை சேர்ந்தவர் சிவசுந்தரி, 71; கடந்த 28ம் தேதி மாலை வீட்டின் அருகே நடை பயிற்சி மேற்கொண்டார்.

அப்போது, பைக்கில் வந்த இரு வாலிபர்கள், சிவசுந்தரி கழுத்தில் அணிந்திருந்த 5 பவுன் தங்கச் சங்கிலியை பறித்தனர்.

திடுக்கிட்ட மூதாட்டி, செயினை இருக்கி பிடித்து கொண்டு கூச்சலிட்டார். மர்ம நபர்கள் வேகமாக இழுத்ததில், பாதி செயினை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றனர். இதுகுறித்த புகாரின் பேரில் அண்ணா மலை நகர் போலீசார் வழக்கு பதிந்து, மர்ம நபர்களை தேடிவருகின்றனர்.

Vencobb
Vencobb No.1 Tastiest Chicken
வென்காப் சிக்கன்
நேற்றைய பண்ணை கொள்முதல் விலை ₹ 134
சராசரி எடை 1.70 க்கு கீழ் உள்ள கோழிகளுக்கு ரூ.3 கூடுதல் விலை
today's Suggested Retail price per Kg
தோலுடன் கறி ₹226 | தோல் நீக்கிய கறி ₹244

மேன்மைமிகு கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், எண்.III விருத்தாசலம்
M.C.O.P. 340/2024
கிருஷ்ணராஜா, த/பெ.பரமசிவம், எண்.38, மேற்கு தெரு, ஆவட்டி கிராமம், திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம்.
–மனுதாரர்
–எதிர்
பாஸ்கரன், த/பெ. நாகப்பன்
102, STAFF A QUARTERS, CHINNA SURIYUR IIM, புதுக்கோட்டை மெயின் ரோடு, திருச்சிராப்பள்ளி – 620024.
–1ம்எதிர்மனுதாரர்
மனுதாரர் கடந்த 08.07.2024-ம் தேதி மாலை 04.00 மணியளவில் 1-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN.81.V.7367 என்ற வாகனத்தால் ஏற்பட்ட விபத்தில் மனுதாரருக்கு உண்டான காயங்களுக்காக விபத்து நஷ்டயீடு கோரி மனு தாக்கல் செய்துள்ளார். அதில் 1-ம் எதிர்மனுதாரராகிய தங்களுக்கு எதேனும் ஆட்சேபனை இருந்தால் வரும் 05.10.2026 அன்று காலை 10.30 மணிக்கு மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறினால் EX-PARTY உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
R.ரவிந்தர், B.Sc., B.L.,
வழக்கறிஞர், விருத்தாசலம்.
செல் :9442694815

மேன்மைமிகு சிறப்பு சார்பு நீதிமன்றம், கடலூர்
M.C.O.P.446/2026
திரு.நடராஜன்
த/பெ.கிருஷ்ணமூர்த்தி, க.எண்.3/19, புது எண்.20, மாதா கோவில் தெரு, தூக்கணாம்பாக்கம், கடலூர்-607402.
–மனுதாரர்
எதிர்
திரு.வீராசாமி, த/பெ. நடராஜன், க.எண்.18, ஐய்யனார் கோவில் தெரு, வைத்திக்குப்பம், புதுச்சேரி.
–1ம் எதிர்மனுதாரர்
1ம் எதிர்மனுதாரருக்கு நோட்டீஸ்
இந்த நெம்பரில் மனுதாரர் வாகன விபத்தில் அடிப்பட்டமைக்கு நஷ்டஈடு கேட்டு மனுதாக்கல் செய்து அதில் 1ம் எதிர்மனுதாரராகிய நீங்கள் ஆஜராக மேற்படி கோர்ட்டில் வாய்தா 12.10.2026ல் அன்று வைக்கப் பட்டுள்ளது. இதில் தங்களுக்கு ஆட்சேபனை இருந்தால் அன்று காலை 10.00 மணிக்கு மேற்படி கோர்டில் ஆஜராகி ஆட்சேபனை தெரிவித்து கொள்ளலாம். இல்லையெனில் ஒரு தலைபட்சமாக தீர்ப்பளிக்கப்படும்என்பதை அறியவும்.
S.ராம்மோகன், B.Sc., B.L.,
மனுதாரர் வழக்கறிஞர்,
கடலூர்.

கல்லூரி மாணவர் சாலை விபத்தில் பலி

வடலூர், அக். 2–

பைக்கில், அரசு பஸ்சை முந்திச் செல்ல முயன்ற கல்லூரி மாணவர் தவறி விழுந்து இறந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

வடலூர், மேட்டுக் குப்பம் அருகே உள்ள செங்கால்பாளையத்தை சேர்ந்தவர் ஜெகதீஷ் மகன் மணிபாரதி, 21; கோயம்புத்தூர் கல்லூரியில் பி.எஸ்சி., விஷூவல் கம்யூனிகேஷன் படித்து வந்தார்.

அதே பகுதியை சேர்ந்தவர் முருகன் மகன் கார்த்திக் ராஜா. வடலூரில் உள்ள தனியார் பாலிடெக்னிக் கல்லூரியில் இ.இ.இ., படித்து வருகிறார்.

இருவரும், கல்லூரியில் ஸ்காலர் ஷிப் வாங்குவதற்காக ஆவணங்கள் வாங்க, பைக்கில் வடலூருக்கு புறப்பட்டனர். பைக்கை கார்த்திக் ராஜா ஓட்டினார். மணிபாரதி பின்னால் அமர்ந்திருந்தார்.

வடலூர் அரசு போக்குவரத்து கழக பணிமனை அருகே வந்தபோது, முன்னால் சென்ற லாரி மற்றும் அரசு பஸ்சிற்கும் நடுவே புகுந்து முந்திச் செல்ல கார்த்திக் ராஜா முயன்றார். அப்போது அரசு பஸ் டிரைவர், பஸ்சை வலதுபுறமாக திருப்பியதில், பைக்கில் இடித்தது.

அதில் பைக்கில் அமர்ந்திருந்த மணிபாரதி நிலை தடுமாறி கீழே விழுந்தார். பைக்கை ஓட்டிச் சென்ற கார்த்திக்ராஜா லாரியின் வலது புறம் மோதி கீழே விழுந்தார்.

அதில், படுகாயமடைந்த இருவரையும், அங்கிருந்தவர்கள் மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் குறிஞ்சிப்பாடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர்.

அங்கு, அவர்களை பரிசோதித்த டாக்டர் மணிபாலன் ஏற்கனவே இறந்து விட்டதை உறுதி செய்தனர். கார்த்திக் ராஜாவிற்கு தீவிர சிகிச்சை அளிக்கப் பட்டு வருகிறது.

விபத்து குறித்து வடலூர் போலீசார் வழக்கு பதிந்து, மணிபாலன் எந்த வாகனத்தில் சிக்கி இறந்தார் என்பது குறித்து விசாரித்து வருகின்றனர்.

வாக்காளர் பெயர் சேர்க்க விரைவில் சிறப்பு முகாம்

கடலூர், அக். 2–

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விரைவில் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பு:

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியின்போது விடுபட்ட வாக்காளர்கள் மற்றும் இளைஞர்கள், முதல் முறையாகத் தகுதி பெறும் வாக்காளர்களை பதிவு செய்வதற்கான சிறப்பு முகாம் நடத்த இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

அதன்படி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் விடுப்பட்ட வாக்காளர்கள், இளைஞர்கள், முதல் முறையாகத் தகுதி பெறும் வாக்காளர்களை பதிவு செய்வதற்கான சிறப்பு முகாம் விரைவில் நடத்தப்பட உள்ளது.

இந்த முகாமில் 1.10.2026 தகுதி நாளாக கொண்டு பெயர்கள் சேர்க்கப்பட உள்ளது.

ரயில்களில் முண்டியடித்த தென்மாவட்ட பயணிகள்



■ விருத்தாசலம் ரயில் நிலையம் வழியாக சென்ற கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் ரயிலில், படியில் தொங்கியபடி சென்ற பயணிகள்.

விருத்தாசலம், அக். 2–

காந்தி ஜெயந்தி தொடர் விடுமுறை காரணமாக தென்மாவட்ட ரயில்களில் முண்டியடித்தபடி பயணிகள் சென்றனர்.

காந்தி ஜெயந்தி அரசு விடுமுறை, நாளை மற்றும் நாளை மறுநாள் வார விடுமுறை நாட்கள் என்பதால், தலைநகரான சென்னையில் தங்கியிருந்த தென் மாவட்ட பயணிகள் சொந்த ஊர்களுக்கு நேற்று மாலை புறப்பட துவங்கினர். சாலை மார்க்கத்தில் ஆயிரக்கணக்கான வாகனங்கள், ஆங்காங்கே டோல்கேட்டுகளில் நெரிசலில் சிக்கின.

அதுபோல், சென்னையில் இருந்து விழுப்புரம் – விருத்தாசலம் – அரியலூர் – திருச்சி மார்க்கமாக சென்ற தென் மாவட்ட ரயில்களில் முண்டியடித்து கொண்டு பயணிகள் சென்றனர். வழக்கத்திற்கு அதிகமாக பயணிகள் சென்றதால், நிற்க கூட முடியாமல் திணறும் அவலம் ஏற்பட்டது. பொதுப்பயண பெட்டிகள் மட்டுமல்லாது ரிசர் வேஷன் பெட்டிகளிலும் நின்றபடி பயணித்தனர்.

அதன்படி, விருத்தாசலம் ரயில் நிலையத்துக்கு, நேற்று மாலை 6:50 மணிக்கு வந்த சென்னை காரைக்குடி பல்லவன் சூப்பர் பாஸ்ட் ரயிலில் நூற்றுக்கும் மேற்பட்ட பயணிகள் இறங்கி, ஏறினர். அதன்பின் வந்த கொல்லம், கன்னியாகுமரி, ராமேஸ்வரம், பொதிகை, முத்துநகர், ராக்போர்ட் என அனைத்து ரயில்களிலும் பயணிகள் கூட்டம் அதிகமாக இருந்தது.

பெண்கள், மாணவிகள் உள்ளிட்ட பலரும், படிக்கட்டுகளிலும் ஆபத்தான நிலையில் தொங்கியபடி சென்றனர்.

சிதம்பரம் ரயில் நிலைய பிறந்தநாள் விழா அவசர கதியில் நடத்தியதால் பயணிகள் அதிருப்தி

சிதம்பரம், அக். 2–

சிதம்பரம் ரயில் நிலையத்திற்கு, பிறந்த நாள் விழா, அவசர கதியில் நடந்துள்ளதாக ரயில் பயணிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

நாடு முழுவதும் 100 ஆண்டுகளை கடந்த ரயில் நிலையங்களை பாரம்பரிய ரயில் நிலையமாக அறிவித்து, பிறந்த நாள் விழா கொண்டாட, இந்திய ரயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

அதன்படி சிதம்பரம் ரயில் நிலையத்தின் பிறந்த நாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது. விழா வையொட்டி, ரயில் நிலையம் முழுவதும் மின்னொளியில் மின்னியது. தொடர்ந்து ரயில்வே அதிகாரிகள் கேக் வெட்டினர். பின்னர் பள்ளி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடந்தது.

விழா வையொட்டி, ரயில் நிலையத்தில் அமைக்கப்பட்ட புகைப்பட கண்காட்சியில், பழமையான ரயில் நிலையங்களின், 100 ஆண்டுகளுக்கு முந்தைய நிலையில் உள்ள ரயில் நிலைய போட்டோக்கள் காட்சி படுத்தப்பட்டது. இதனை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

இந்த பெருமைமிக்க விழாவை நடத்திய ரயில்வே நிர்வாகம், பொதுமக்களுக்கு, ரயல் பயணிகளுக்கு எவ்வித அறிவிப்பும் விடுக்க வில்லை. குறிப்பாக ரயில் நிலைய வளாகம் கூட சரியான முறையில் சுத்தம் செய்யாமல் இருந்தது பயணிகளிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

கணவர் கண்ணெதிரில் லாரி மோதி மனைவி பலி

கடலூர், அக். 2–

கடலூர் அருகே கணவருடன் பைக்கில் சென்ற பெண், லாரி மோதி இறந்தார்.

சிதம்பரம் அடுத்த தெற்கு பிச்சாவரத்தைச் சேர்ந்தவர் பார்த்திபன், 33; இவரது மனைவி கெஜலட்சுமி, 28; இவர்கள் நேற்று முன்தினம் தங்களது ஒன்றரை வயது பெண் குழந்தையுடன், திருவந்திபுரம் தேவநாத சுவாமி கோவிலில் தரிசனம் செய்தார்.

பின்னர், விழுப்புரம்–நாகப்பட்டிணம் புறவழிச் சாலையில் பைக்கில் பிச்சாவரத்திற்கு புறப்பட்டனர்.

கடலூர் அடுத்த அன்னவல்லி மேம்பாலம் அருகே சென்றபோது, குழந்தைக்கு தண்ணீர் கொடுப்பதற்காக பார்த்திபன் பைக்கை நிறுத்தினார்.

அப்போது, கெஜலட்சுமி கீழே இறங்கி நின்ற போது, பின்னால் வந்த லாரி, அவர் மீது மோதியது. இதில், தலையில் படுகாயமடைந்தஅவரை அங்கிருந்தவர்கள் மீட்டு கடலூர் அரசு மருத்துவ மனையில் சேர்த்தனர்.

அங்கு, அவரை பரிசோதித்த டாக்டர், ஏற்கனவே கெஜலட்சுமி இறந்து விட்டதை உறுதி செய்தனர்.

இதுகுறித்து கடலூர் முதுநகர் போலீசார் வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர்.

காப்பர் கேபிள் திருடியவர் கைது 2 பேருக்கு வலை

நெய்வேலி, அக். 2–

நெய்வேலியில் காப்பர் கேபிள் திருடியவரை போலீசார் கைது செய்தனர். மேலும், இருவரை தேடிவருகின்றனர்.

நெய்வேலி டவுன்ஷிப் பகுதி வட்டம் 8ல் என். எல்.சி நிறுவனத்தின் சோலார் பிளான்ட் அமைந்துள்ளது. இங்கு தனியார் நிறுவனம் ஒன்று, 3 வருட ஒப்பந்தத்தின் அடிப்படையில் மின் தயாரிப்பு பணிகளை மேற்கொண்டு வருகிறது. அங்கு நேற்று மதியம், 3 பேர் கொண்ட கும்பல் ஒன்று, ரூ.,16 ஆயிரம் மதிப்புள்ள, 16 மீட்டர் காப்பர் கேபிள்களை திருடி தப்ப முயன்றனர்.

அவர்களில் ஒருவரை, காவலர்கள் பிடித்து நெய்வேலி டவுன்ஷிப் போலீசில் ஒப்படைத்தனர்.



சிவபாலன்

விசாரணையில், நெய்வேலி வட்டம் 30, வார்டு 4ஐ சேர்ந்த சுப்ரமணியன் மகன் சிவபாலன், 30, என்பது தெரிய வந்தது. அதன்பேரில் போலீசார் வழக்கு பதிந்து சிவபாலனை கைது செய்தனர்.

மேலும், தப்பியோடிய அதே பகுதியை சேர்ந்த கந்தவேல் மகன் ஆனந்த குமார், 22, சங்கர் மகன் தேவா (எ) மகாதேவன், 20, ஆகியோரை தேடிவருகின்றனர்.

சரித்திர பதிவேடு குற்றவாளி கைது

திட்டக்குடி, அக். 2–

பொது மக்களிடம் தகராறு செய்த சரித்திர பதிவேடு குற்றவாளியை போலீசார் கைது செய்தனர்.

திட்டக்குடி அடுத்த நெடுங்குளத்தைச் சேர்ந்தவர் ராதா மகன் செல்லதுரை, 23. இவர் கடந்த ஏப்ரல் மாதம் அதே பகுதியைச் சேர்ந்த பெண்ணை திட்டி, மானபங்கம் செய்துள்ளார். இதுகுறித்து திட்டக்குடி போலீசார் வழக்குப் பதிந்து கைது செய்து, சிறையில் அடைத்தனர்.

ஜாமினில் வெளியே வந்த இவர், தொடர்ந்து அப்பகுதியில் சண்டை உள்ளிட்ட பிரச்னை செய்து வந்தார். அதனை யொட்டி, அவரது ஜாமினை ரத்து செய்ய போலீசார், திட்டக்குடி ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் மனு அளித்தனர். அதனையேற்று, செல்லதுரையின் ஜாமினை ரத்து செய்து, நீதிபதி உத்தரவிட்டார். அதைத்தொடர்ந்து, சரித்திர பதிவேடு குற்றவாளியான ரவுடி செல்ல துரையை கைது செய்தனர். இவர் மீது ஒரு கொலை வழக்கு, 4 சண்டை வழக்குகள் உள்ளது குறிப்பிடத்தக்கது.



செல்லதுரை

ரயில் பயணியிடம் செல்போன் திருடியவர் கைது

விருத்தாசலம், அக். 2–

ரயில் பயணியிடம் செல்போன் திருடிய வாலிபரை போலீசார் கைது செய்தனர்.

சிவகங்கை மாவட்டம், மாத்தூர் மணி நகரை சேர்ந்தவர் மலைசாமி மகன் மணி முத்து, 32. டிரைவர்.

இவர் கடந்த 29ம் தேதி சித்தப்பாவுடன் சிவகங்கையில் இருந்து விழுப்புரத்திற்கு சேது எக்ஸ்பிரஸ் ரயிலில் பொது பெட்டியில் பயணம் செய்தார்.

அதிகாலை 3:30 மணியளவில், பாக்கெட்டில் இருந்த அவரது செல் போனை 30 வயது மதிக்கத்தக்க மர்மநபர் ஒருவர் திருடினார்.

இதனை பார்த்த அவர், அந்த நபரை கையும் களவுமாக பிடித்து விருத்தாசலம் ரயில்வோ போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

விசாரணையில், அவர் சிவகங்கை மாவட்டம், சாலையூர் காசிம் ராவுத்தர் தெருவை சேர்ந்த தமீம் அன்சாரி, 28; என்பது தெரிய வந்தது. அவரை போலீசார் வழக்கு பதிந்து தமீம் அன்சாரியை கைது செய்தனர்.



தமீம் அன்சாரி

மதுபாட்டில் விற்றவர் கைது

விருத்தாசலம், அக். 2–

கள்ளச் சந்தையில் டாஸ்மாக் மதுபாட்டில் விற்ற வரை போலீசார் கைது செய்தனர்.

விருத்தாசலம் மதுவிலக்கு அமல்பிரிவு போலீசார் நேற்று வண்ணான் குடிகாட்டில் ரோந்து சென்றனர்.

அப்போது, அங்கு டாஸ்மாக் மதுபாட்டில்களை கள்ளச் சந்தையில் விற்ற அதேபகுதியை சேர்ந்த ராமசாமி மகன் பாண்டுரங்கன், 52. என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 15 குவாட்டர் பாட்டில்களை பறிமுதல் செய்தனர்.

திருட்டு வழக்கில் 5 ஆண்டு தலைமறைவானவர் கைது

கடலூர், அக். 2–

திருட்டு வழக்கில் 5 ஆண்டாக தலைமறைவாக இருந்தவரை போலீசார் கைது செய்தனர்.

கடலூர், பெரியகங்கணாங்குப்பத்தை சேர்ந்தவர் சாந்தப்பன். கடந்த 2021ம் ஆண்டு இவரது வீட்டின் கதவை உடைத்து 5 சவரன் நகைகள், ரூ.40 ஆயிரம் ரொக்கம், வெள்ளி பொருட்கள் மற்றும் பைக் திருடு போனது.

இதுகுறித்து ரெட்டிச் சாவடி போலீசார் வழக்கு பதிந்த, கடலூர் பச்சாங்குப்பத்தை சேர்ந்த லட்சுமணன், ஆலப்பாக்கம் சீனிவாசபுரத்தை சேர்ந்த ராஜேந்திரன் ஆகியோரை கைது செய்து சிறையில் அடைத்தனர். தலை மறைவாக இருந்த கடலூர் மஞ்சக்குப்பம், காமராஜர் நகரை சேர்ந்த மனோகர் மகன் விக்னேஷ், 31; என்பவரை நேற்று கைது செய்து, கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.



விக்னேஷ்

BEFORE THE DEBTS RECOVERY TRIBUNAL - II AT CHENNAI
O.A. No.41 OF 2026
UNION BANK OF INDIA [UBIN0932698] Rep by its Branch Manager, Chinnasalem Branch. (Previously Corporation Bank, Chinnasalem Branch) 562, Salem Main Road, Chinnasalem, Kallakurichi District.
- Applicant Bank
Versus
1) Mr.R.Krishnaswamy, (Voter I.D.No.TN/15/072/0087230),
2) Mr.V.Thirumaran,
3) Mr.R.Kannan. - Defendants
To, 3.Mr.R.Kannan, Son of Ramasamy, Residing at North Street, Melnariyappanur Post, Chinnasalem Taluk, Kallakurichi District. -3rd Defendant
NOTICE
The above O.A. has been filed by the applicant Before The Debt Recovery Tribunal–II,Chennai and the Honourable Court was pleased to ordered notice to you returnable by 03.12.2026. Please take notice that the above matter is posted for your appearance on 03.12.2026 Kindly be present on the said date at 11.00 a.m. before the above said Tribunal either in person or through your counsel, failing which the matter will be decided in your absence .
S.BALAJI, M.V.SESHACHARI
Counsel For Applicant

உட்கோட்டம் நிர்வாக நடுவர் /சார் ஆட்சியர், விழுப்புரம்
இறப்பு/சி.ப.வ.எண்.அ4/xxx/2026
விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், தொரவி அஞ்சல், டி.பனப்பாக்கம், 69, பிள்ளையார் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் செல்வராஜ் மகன் வீரமணி
பொது அறிவிப்பு
மனுதாரர் வீரமணிஆகிய நான் எனது வீட்டில் எனது தாத்தா கோவிந்தசாமி மகன் ராஜமாணிக்கம் என்பவர் கடந்த 07.11.2002ம் ஆண்டு தேதியில் இறந்தார் என்பதை கவனக்குறைவாக பதிவு செய்ய தவறிவிட்டேன். தற்பொழுது கோவிந்தசாமி மகன் ராஜமாணிக்கம் இறப்பு சான்று, வாரிசு சான்று தேவைப்படுவதால் எனது தாத்தா கோவிந்தசாமி மகன் ராஜமாணிக்கம் என்பவராது இறப்பு சான்று வேண்டி இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின், 15 தினங்களுக்குள் இந்நீதிமன்றத்தில் எழுத்து மூலமாகவோ, நேரிலோ ஆஜராகி ஆட்சேபனை தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறினால், இம்மனுவில் ஏதும் ஆட்சேபனை இல்லையென பாவித்து ஒரு தலைபட்சமாக தீர்மானித்து உத்தராவாகிவிடும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
மனுதாரர்
வீரமணி த/பெ. செல்வராஜ்,
டி.பனப்பாக்கம்.

மேன்மைமிகு கூடுதல் சார்பு நீதிமன்றம், திண்டிவனம்
A.S.No.46/2026
புதுச்சேரி-605007, முத்தியால்பேட்டை, நெ.13, முத்தைய முதலியார் தெரு, என்ற முகவரியில் வசிக்கும் வரதராசு குமாரர் சம்பத் (இறந்தார் மற்றும் 16 நபர்கள். –மேல்முறையீட்டாளர்கள்
எதிர்
தமிழ்நாடு மாநிலம், விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், இரும்பை மதுரா இடையஞ்சாவடி கிராமத்தில் என்ற முகவரியில் வசிக்கும் அரிபுத்ரி குமாரர் ஜெயராமன்
–2ம் எதிர்மேல்முறையீட்டாளர்
அறிவிப்பு
மேல்முறையீட்டாளர்கள் தங்களுக்கு எதிராக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்-ல், ஓ.எஸ். எண்.55/2012 வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பினை எதிர்த்து தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டு வழக்கில் 2-ம் எதிர்மேல்முறையீட்டாளர் ஆகிய தாங்கள் ஆஜராக 27.10.2026 அன்று காலை 10 மணிக்கு வாய்தா வைக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் தாங்கள் நேரில் ஆஜராக இந்த அழைப்பானை அளிக்கப்படுகிறது. தாங்கள் ஆஜராக தவறும் பட்சத்தில் தங்களை ஒருதலை பட்சமாக பாவித்து கனம் நீதிமன்றம் தகுந்த உத்தரவு பிறப்பிக்கும் என்பதை அறியவும்.
V.அனந்தவிஜயன், M.Com, B.L.,
வழக்கறிஞர் & நோட்டரிபப்ளிக்,
வானூர்.

பறிமுதல் செய்யப்பட்ட வாகனத்தின் ஏலம்
தேதி: 05.11.2026
நேரம்: 11.00Am to 12.00 Noon
விழுப்புரம் கிளை
பேங்க் ஆஃப் பரோடா 119
40/41, தியாகராஜர் தெரு, திரு.வி.க. சாலை, விழுப்புரம் - 605 602.
போன் : 04146-225424, Mail ID: villup@bankofbaroda.bank.in

வாகன மின்-ஏல அறிவிப்பு

பொதுமக்களுக்கும், குறிப்பாகக் கடன் வாங்கியவர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோருக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், சம்பந்தப்பட்ட தரப்பினரால் கையொப்பமிடப்பட்ட அடமானம்/கடன் ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடமானம் வைக்கப்பட்ட மோட்டார் வாகனத்தை வங்கி திரும்பப் பெற்றுள்ளது/கைப்பற்றியுள்ளது. மேலும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு/கணக்குகளில் நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக, **அந்த வாகனம் உள்ளபடியே, இருக்கும் இடத்திலேயே, உள்ளபடியே, என்ன இருக்கிறதோ அப்படியே மற்றும் இருப்பது எதுவாக இருந்தாலும் என்ற அடிப்படையில் விற்கப்படும்.** கடன் வாங்கியவர்(கள்)/ஜாமீன்தாரர்(கள்)/வாகனம்/மொத்த நிலுவைத் தொகை/மின்-ஏலத் தேதி மற்றும் நேரம், முன்பணம் மற்றும் ஏல உயர்வு தொகை ஆகியவற்றின் விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ. எண்	கடன் தாரர் / ஜாமீன் தாரர் பெயர் மற்றும் முகவரி	வாகனத்தின் வகை / பதிவு எண்.	30.09.2026 அன்று வரை நிலுவைத் தொகை	நிர்ணயிக்கப்பட்ட விலை	EMD தொகை
1.	திரு. **ஜோதிராம், த/பெ. முருகநிதி** நெ. 5/89-A, விராட்டிக்குப்பம் பாதை, வண்டிமேடு, விழுப்புரம் - 605602. திரு. **D.அன்புசெழியன்,** நெ. 5/89, கருணா நகர், விராட்டிக்குப்பம் சாலை, விழுப்புரம் - 605602.	Hyundai Grand i10 Magna Diesel TN 32 AJ 3092 Wine Red ORIGINAL RC COPY AVAILABLE **(Vehicle Engine Ceased & Both Keys available)**	ரூ. 2,38,765.14 (இரண்டு லட்சத்து முப்பத்தி எட்டாயிரத்து எழுநூற்றி அறுபத்தி ஐந்து மற்றும் பதினான்கு பைசா மட்டும்) + இதர கட்டணங்கள் உட்பட	ரூ. 95,000/-	ரூ. 9,500/-

மின் ஏல நாள் : 05.11.2026 & நேரம் : காலை 11.00 முதல் நண்பகல் 12.00 மணி வரை
குறைந்த பட்ச ஏல உயர்வு தொகை ரூ.5,000/- (ரூ. ஐந்தாயிரம் மட்டும்)
வாகனத்தை பார்வையிடும் நாள் & நேரம்: 23.10.2026 காலை 10.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை
BAANKNET Property ID: BARBJOTHIRAM
நிபந்தனைகள்: 1. விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://baanknet.com என்ற இணையதள இணைப்பை பார்க்கவும். ஏலம் கோர விரும்புவோர் **Mr. Raj Amruth Mesian** செல்: 9099007390 அவர்களை தொடர்பு கொள்ளவும். 2. அசல் ஆர்.சி. உள்ளது. வெற்றி பெற்ற ஏலதாரர் 18% GST தொகையை செலுத்த வேண்டும்.
தேதி : 30.09.2026
இடம் : விழுப்புரம்
அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர்/ பேங்க் ஆஃப் பரோடா

பஞ்சமி நிலங்களை மீட்கக்கோரி கடலூரில் உண்ணாவிரதம்

கடலூர், அக். 2–

கடலூர் பழைய கலெக்டர் அலுவலகம் எதிரில் புரட்சி அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கம் சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது.

மாவட்ட செயலாளர் பாண்டியராஜன் தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர் வேதநாராயணன், குணா முன்னிலை வகித்தனர். இயக்க நிறுவனர் யேசுமரியான் கண்டன உரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில் மாநில தலைவர் செல்வராஜ், அம்பேத்கர் இந்திய குடியரசு கட்சி தலைவர் ஸ்ரீரங்கன் பிரகாஷ், சக்தி வேல், பிரேம் ஆனந்த், இந்திய குடியரசுகட்சி மாவட்ட தலைவர் வீரவேல் உட்பட பலர் பங்கேற்றனர்.

பஞ்சமி நிலங்களை மீட்டு பட்டியலின மக்களுக்கு வழங்க வேண்டும். பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கு தாட்கோ மூலமாக வழங்கப்படும் கடன் திட்டங்களை வழங்க தனி வங்கி ஏற்படுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் உண்ணாவிரதத்தில் வலியுறுத்தப்பட்டன.